# மகாத்மா காந்தி



கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

திரு. க. சொக்கலிங்கமவர்களுக்கு
அன்பளிப்பு
கு.மு. 12.10.69.

# மகாத்மா காந்தி

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

புலவரகம்
மயிலணி சுன்னுகம் இலங்கை
1969

புலவரக வெளியீடு 16

முதற் பதிப்பு 1969

விலை சதம் 35

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
யாழ்ப்பாணம்

# *மகாத்மா காந்தி
## (1869 — 1949)

உலக சரித்திரத்தை உற்று நோக்கும்போது பற்பல காலங்களிற் பற்பல நாடுகளில் முனிவர்கள், ஞானிகள், சாதுக்கள், வீரர்கள், கவிஞர்கள், அரசியல் நிபுணர்கள், விஞ்ஞானிகள் தோன்றிப் புகழ் படைத்து வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது. அவர்களுள் மனிதனுடைய ஆத்ம வளர்ச்சிக்காக உழைத்தவர்களுடைய புகழ் காலப் போக்கிற் குன்றிப்போகாது நிலைபெற்று விளங்குவதையும் நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆத்ம வளர்ச்சிக்காகப் பெரிதுமுழைத்து இணையிலாப் புகழ்படைத்த புத்தர் பெருமானுக்குப் பின் அத்துறையில் ஓயாதுழைத்து ஈடிலாப் பெருமையடைந்தவர் மகாத்மா காந்தியாவர். அவர் ஒரு சாதாரண புருடரல்லர். அவர் ஓர் அவதார புருடர். தேசத் தலைவர்களுள் 'மகாத்மா' என்னும் சீரிய பட்டம் பெற்றவர் அவர் ஒருவரே. அப் பட்டம் அவர் தொடுத்த போராட்டங்களுக்காவது, அவருடைய திறமைக்காவது, அவருடைய தோற்றத்திற்காவது கொடுக்கப்படவில்லை. அது அவருக்கு இணையிலாச் செல்வாக்கையும், மேலான தலைமைப் பதவியையும் கொடுத்த ஆத்ம சக்தி இருந்த காரணத்தாற் கொடுக்கப்பட்டது. மகாத்மா என்னுஞ் சொல் மகா — பெரிய, ஆத்மா — மனிதனிடத்துள்ள புருஷத்துவம் என்று பொருள்படும்.

கிரேக்க ஞானியாகிய அறிஸ்டோற்றில் (Aristotle கி. மு. 384) என்பவரை மனிதனுடைய எந்தக் குணம் சிறந்தது? என்று வினவியபோது அவர், 'விவேகம்' என்று

---

* இது சுன்னாகம் பட்டணசபை ஆராய்வுக் குழுவின் ஆதரவில் 22-7-69 இல் நடந்த காந்தி நூற்றாண்டு விழாவில் இந்நூலாசிரியர் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

விடை பகர்ந்தார். அது உண்மையில் ஆத்ம சக்தியின் ஒரு பகுதியைக் குறிக்குமேயன்றி முழுவதையும் குறிக்காது. அச் சக்தியை உபநிடதங்களில் வரும் ''எல்லையற்ற பரமபுருடன் மனிதனிடத்தில் வீற்றிருக்கிறான்'', 'தத்துவமசி', 'மனிதன் பரம்பொருளின் விம்பம்' முதலிய வாக்கியங்கள் நன்கு விளக்குகின்றன. ஒருவன் தன்னிடத்துள்ள குறை குற்றங்களை நீக்குவதனால் பரமபுருடனை அடைவதோடு அவனிடத்துள்ள அளவிறந்த சக்திகளையும் பெறுகிறான். இச் சக்திகளின் வடிவமாகவே காந்தி விளங்கினார்.

உலகத்தில் காந்தி ஒருவரே சாதுத் தன்மைக்குச் சிருட்டிக்கும் ஆற்றல் உண்டென்றும், ஆத்ம சக்திக்கு மேலான சக்தி வேறில்லையென்றும் நிரூபித்துக் காட்டினார். அவர் கட்டுக்கடங்காத தீய சக்திகளிடையில் வாழ்ந்து ஒரு பெரிய இலட்சியத்தைக் கடைப்பிடித்து வெற்றியடைந்தார். அவர் தமது இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதிற் காட்டிய மனவுறுதியானது அவர் வழிச் செல்வோர் யாவருக்கும் அளவிலா ஊக்கத்தைக் கொடுக்கிறது.

முப்பதுகோடி மக்களின் சமுதாய வாழ்க்கையைப் பண்படுத்தி, அவர்களுடைய ஒற்றுமையையும், உணர்ச்சியையும், தன்மதிப்பையும், விடுதலை விருப்பத்தையும் தூண்டி விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணியதன் காரணமாக ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுப்போக நேர்ந்தது, காந்தியின் ஆத்ம சக்தியினால் ஏற்பட்டதென்று கூறுவது மிகையாகாது. காந்தியின் புகழ் உலகெங்கணும் பரவுவதற்கு இந்திய சுதந்திரப் போரில் அடைந்த வெற்றியே காரணமாகும். ''கீழை நாடு கீழை நாடே, மேலை நாடு மேலை நாடே. இரண்டும் ஒருபோதும் சந்திக்கா'' என்ற றட்யாட் கிப்ளிங் (Rudyard Kipling) என்னும் ஆங்கிலப் புலவரின் வாக்குப் பொய்யாகப் போயிற்று. காந்தி கீழைத் தேசத்தவராலும் மேலைத் தேசத்தவராலும் பெரிதும் போற்றப்படுகிறார்.

அக் காலத்தில் மேலைத் தேசத்தவர்கள் இந்தியாவுக்கு வரும்போது முக்கியமாக மூன்று காட்சிகளைக் காணும் நோக்கத்தோடு வந்தனர். அவையாவன: இமயமலை, தாஜ்மகால், மகாத்மா காந்தி என்பனவாம். காந்தி மானிட சமுதாயத்தின் உற்ற நண்பர் என்று எல்லாரும் கைக்கொண்டார்கள். அவர் சத்திய யுகத்தை ஆரம்பித்த மகானகையால் அவருடன் எல்லாரும் உரையாட விருப்பங் கொண்டனர்.

## காந்தியும் கடவுளும்

காந்திக்குக் கடவுள் முக்கியம். அவர் கடவுளிடம் நிச்சயமான நம்பிக்கையுள்ளவர். அவர் தமக்குக் கடவுள் முக்கியமென்பதைப் பின்வருமாறு விளக்கியுள்ளார். "காற்றும் நீரும் இல்லாமல் நான் உயிர் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அந்தப் பரம்பொருளில்லாமல் நான் இருக்க முடியாது." சத்தியமே கடவுள். அதுவன்றி வேறில்லை. அது மனிதனது அறிவுக்கப்பாற்பட்டது. அது எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறது. அதை அன்பு அல்லது அகிம்சையால் அடைய முடியும். வரம்பு கடந்த அன்பு, வரம்பு கடந்த துன்பம், உள்ளத் தூய்மை என்பவற்றை உடையவர்கள் கடவுளிடத்திற் பக்தி செய்ய முடியும். உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்குப் புலனெடுக்கம் வேண்டும். புலனெடுக்கம் அடைவதற்குத் தவம் செய்தல் வேண்டும். தவஞ்செய்பவர்கள் துன்பத்தை அடைவார்கள். துன்பத்தின் முடிவில் அகத்தூய்மை ஏற்படும் என்பது காந்தியின் கருத்து.

காந்தி கடவுளின் திருவருளை நாடி ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் வணக்கஞ் செய்தனர். வணக்கஞ் செய்யும்போது அவர் கடவுளோடு ஒன்றுபட்டுத் தம்மிடத்தில் ஒரு தெய்வ சக்தி இருப்பதாகவும், ஒரு குரல் தம்மோடு பேசுவதாகவும் உணர்ந்தார். அக் குரல்தான் கடவுளின் ஆணை என்று அவருக்குத் தோன்றிற்று.

# காந்தியும் மதமும்

காந்தி ஒரு மதபுருடன். எல்லாச் சமயங்களுக்கும் ஒரு கடவுளிருத்தலால் ஒரு சமயத்தவர் மற்றச் சமயத்தவர்களை இகழக்கூடாது என்பது காந்தியின் கருத்து. ஒருவன் எல்லாச் சமயத்தவரையும் நேசிக்க வேண்டும். அவர் எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொண்டாலும் தம்மை 'ஒரு சநாதன இந்து' என்று கூறினர். அவர் தமது சமயக் கொள்கைகளைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

'ஒவ்வொரு மனிதனும் கடவுளின் வடிவமாயிருக்கிறன். ஆனல், அவன் அறியாமை என்னும் இருளினல் மூடப்பட்டிருக்கிறன். அறியாமையானது உள்ளத்திலிருக்கும் பரம்பொருளைச் சேரவிடாமல் தடுக்கிறது. அவன் தன்னுள்ளத்திலுள்ள மோக்ஷம் தனக்குப் புறத்திலிருப்பதாகக் கருதுகிறன்'.

'நான் மதிக்கிற மதம் இந்து மதத்திற்கு அப்பாற்பட்டது. அது ஒருவனது குணத்தை மாற்றவல்லது. அது அவனதுள்ளத்தில் உள்ள பரம்பொருளைச் சேர்க்க வல்லது. மனித சுபாவத்தில் அது ஒரு சக்தியாக இருக்கிறது. அதுதான் சமயம், கர்மம், ஞானம், பத்தி என்பன ஒன்றுபட்டு வாழ்க்கையை ஒன்றுபடச் செய்வதே மதம். ஆத்மாவை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதே சமயத்தின் கடமையாகும்'.

'ஒவ்வொருவரிடத்தும் தெய்வ சக்தி, மாயா சக்தி என்ற இரு சக்திகள் உள்ளன. மாயா சக்தியினின்று தப்பிக் கொள்வதே மதத்தின் நோக்கம். அழியக்கூடிய உலகத்திலே எனக்கு ஆசை இல்லை. நான் முத்தியடைய முயற்சி செய்கிறேன். நாட்டுக்காகவும், சாதிக்காகவும் ஓயாது உழைப்பதே முத்திக்கு வழி. கீதையிற் கூறியவாறு நண்பனுடனும் பகைவனுடனும் சமாதானமாக வாழ விரும்புகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் சமய

மின்றி அரசியலில்லை. சமயம் அரசியலுக்குத் துணை புரிகிறது. எனக்கு மக்கள் சேவையன்றி வேறு சமயமில்லை. எனது வாழ்க்கையிலே இந்துமதம் முக்கிய இடம் பெற்றிருக்கிறது.'

காந்தி மௌன விரதத்தில் அதிகம் நம்பிக்கை உள்ளவர். அவர் அதைத் தமது வாழ்க்கையிற் பலமுறை கையாண்டு பல நன்மைகளைப் பெற்றனர். தீமையைப் போக்கக்கூடிய உலக வாழ்வுக்கு மௌனம் தினமும் கையாளப்படுதல் அவசியம். காந்தி தினமும் இரண்டு மணி நேரம் மௌனமாகவிருந்தனர். தெய்வீக வாழ்வுக்கு மௌனம் அவசியம் வேண்டப்படுகிறது. மௌனத்தின் தெய்வீகத் தன்மையால் அவர் வசீகரிக்கப்பட்டார். அது அவரைக் கடவுளோடு தொடர்புறச் செய்தது. மௌன காலத்தில் அவர் தீர்க்க திருஷ்டி முதலிய சித்திகளைப் பெற்றனர்.

காந்தி உபவாச விரதத்திலும் அதிக நம்பிக்கை உள்ளவர். சமுதாயச் சிக்கல்களையும், அரசியற் சிக்கல்களையும் அகற்றுவதற்கு அவர் உபவாச விரத முறையைப் பலமுறை கையாண்டனர். இந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கமாக 1924-ம் ஆண்டு இருபத்தொரு நாள் உபவாச விரதம் அனுட்டித்தனர். அரிசனங்களுச்குத் தனித்தேர்தல் தொகுதி கொடுக்கப்பட்டதை மறுத்து 1932-ம் ஆண்டு மரணபரியந்தம் உபவாசமிருப்பதாக முடிவு செய்தனர். பின்னர் அரசினர் அவருடைய விருப்பத்திற்கு இணங்கியதன் காரணமாக அவர் விரதத்தைக் கைவிட்டனர். பின்னர் ஆங்கில இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோதும், சௌரி சொராக் கொலைகள் நடந்தபோதும், இராசக் கோட்டையில் ஒரு முறையும் உபவாச விரதம் அனுட்டித்து அனுகூலம் அடைந்தனர்.

'மனச்சாட்சியை வாழ்க்கை வழிகாட்டியாக வைத்திருப்பது முடியாது. அது எல்லா இடத்திலும் சரியா

யிருப்பதில்லை; மனச்சாட்சிக்கு வழிகாட்டவல்லது உலகத்துள்ள மகான்களின் அனுபவங்களாகும்' என்று காந்தி கூறினர்.

அரசியல் நோக்கமும் மதத்தின் நோக்கமும் முரண்பட்டிருந்தமையால் அரசியல்வாதிகள் மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அரசியலில் மதத்தைப் புகுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் காந்தியே.

## அகிம்சை

'அகிம்சோ பரமோ தர்ம:' என்பது மகாபாரத வாக்கியம். 'தீங்கு செய்யாமை மேலான தருமம்' என்பது அதன் பொருள். இது காந்தியின் மூலாதாரக் கொள்கையாகும். இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் தமது போராட்டங்கள் எல்லாவற்றையும் நடத்தினர். அவர் கருத்தின்படி அகிம்சை ஆத்ம சக்தியைக் குறிக்கும். நல்லது செய்ய வேண்டும் என்பதையும், ஒருவன் பலாத்காரத்தில் இறங்கினல் மனவுறுதியோடு அதைத் தாங்குவதையும், எதிர்த்துத் தீங்கு செய்யாமலிருப்பதையும் அது குறிக்கும். 'சத்தியம் எப்படிக் கடவுளோ, அப்படி அகிம்சையும் கடவுள்தான்.'

அகிம்சை உலகிலுள்ள எல்லா ஆயுதங்களிலும் ஆற்றல் மிக்கது. அகிம்சை என்னும் ஆயுதத்தால் கொடுங்கோல் மன்னரின் கூரிய வாள்களை மழுங்கச் செய்வதே தமது நோக்கம் என்று காந்தி கூறினர்.

அகிம்சை ஒரு மேலான நெறி. அதுதான் சிறந்த அன்பு. அதனல் மனிதனுடைய உள்ளத்தை மாற்ற முடியும். அது வீரனுடைய ஆயுதம். அது தனக்குத் துன்பத்தை விளைவிப்பதன்றிப் பிறருக்குத் தீங்கு விளைவிப்பதில்லை.

காந்தி அகிம்சையை அரசியல், பொருளாதாரம் என்னும் துறைகளில் புகுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். அகிம்சை என்னும் சக்தியைக் கண்டு பிடித்த பெருமையும் அவருக்கு உரியது. அக்காரணம் பற்றி அவரை ஒரு சிறந்த விஞ்ஞான சாஸ்திரி என்று போற்றுதற்குரிய தகுதியைப் பெற்றுள்ளார். இச்சக்தியைக் கண்டுபிடிக்க அவர் பல இன்னல்களைத் தமது வாழ்க்கையில் அனுபவிக்க நேர்ந்தது. அவர் இச் சக்தியைக் கொண்டு உலகில் நிலவும் ஆக்கிரமிப்புச் சக்திகளை அழிக்க வந்த அவதார புருஷனாக விளங்கினார்; காந்தி அகிம்சையின் வடிவமாக விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

## சத்தியாக்கிரகம்

அகிம்சையை வாழ்க்கையிற் கையாளும்போது அது சத்தியாக்கிரகம், சாத்வீக எதிர்ப்பு, ஒத்துழையாமை என்ற பெயர்களைப் பெறுகின்றது. காந்தி தமது பிற்காலப் போராட்டத்தைச் 'சத்தியாக்கிரகம்' என்று அழைத்தனர். சத்தியாக்கிரகம் என்னும் சொற்றொடர் சத்தியம் — உண்மையை, ஆக்கிரகம் — கடைப்பிடித்தல் என்று பொருள்படும். காந்தியின் கொள்கைப்படி சத்தியமும் கடவுளும் ஒன்று. சத்தியாக்கிரகம் உண்மையில் வேரூன்றியிருக்கிறது.

மின்சாரத்திலிருந்து சக்தியானது எப்படிப் பயனளிக்கிற முறையில் வேலை செய்கிறதோ அவ்வண்ணம் வேலை செய்யும் சக்திதான் சத்தியாக்கிரகம். யந்திரம் உற்பத்தி செய்கிறதில்லை. அது சக்தியை ஏற்று வேலையைச் செய்கிறது. அதுபோல மனிதனிடத்தில் ஆத்ம சக்தி இருக்கிறது. அதிலிருந்து சத்தியம், ஞானம், என்பன ஊற்றெடுக்கின்றன.

அன்பு என்கிற சக்தி அணிமையிலிருக்கிறது. அது எத்தனையோ கொடிய சக்திகளை எதிர்க்கக்கூடிய ஆற்

றலே மனிதனுக்குக் கொடுக்கிறது. அந்த ஆத்ம சக்தியை ஒருவராலும் அழிக்க முடியாது என்பது காந்தியின் உறுதியான கொள்கை.

சத்தியாக்கிரகம் என்னும் தர்மாயுதம் மனிதனிடத்துள்ள கோபம், துவேஷம் முதலிய தீய குணங்களைப் போக்கிச் சாந்தம், அன்பு முதலிய குணங்களைத் தோற்றுவிக்க வல்லது என்று அவர் கருதினர்.

பலாத்காரம் சத்தியாக்கிரகத்துக்கு மாறுனதென்பதைக் காந்தி பின்வருமாறு கூறியுள்ளார்: "என்னுடைய பகைவனை நான் தாக்கிஞல் அது பலாத்காரம். நான் உண்மையில் அகிம்சா தர்மத்தைப் பின்பற்றுபவஞயிருந்தால் என்னுடைய பகைவன் என்னைத் தாக்கும்போது நான் அவனை நேசிக்க வேண்டும். நமக்குள்ள சங்கடங்களை அறிவு, நல்லெண்ணம், அன்பு, சேவை முதலியவற்றைக் கொண்டு தீர்க்க வேண்டும்".

தீமையைக் களையப் பலாத்காரம் வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். கிறீஸ்து மதத்தின் பிரதம பாதிரியாகிய ஆட்ச்பிசொப் ஒவ் கன்றர்பெரி (Archbishop of Canterbury) உலகச் சண்டை நடந்தபோது "நியாயத்திற்குப் போராட ஆயுத பலத்தைத் தேட வேண்டும்" என்று கூறிஞர். அது மிகவும் பொருத்தமில்லாத கூற்ருகும். புத்தபகவானும் உலகத்தில் துவேஷமிருப்பதைக் கண்டித்து "துவேஷத்திற்குத் துவேஷஞ் செய்தால் முடிவெங்கே?" என்று முழக்கஞ் செய்தனர். பலாத்காரம் நிறைந்த உலகினின்று தப்பவேண்டும்; அன்றேல் அதில் ஈடுபட்டு அழிந்துவிடுவோம் என்பது காந்தியின் கருத்து.

பலாத்காரம் அகிம்சைக்கு மாறுனது. அது மிருக உலகத்துக்குப் பொருந்துமன்றி மனித உலகத்துக்குப் பொருந்தாது. மகாபாரதத்தில் சண்டையிடும் மனிதர் நிறைந்த உலகம் ஒரு நாய்க் கொட்டிலுக்கு ஒப்பிடப் பட்டிருக்கிறது. ஒரு நாய் குலைக்க மற்ற நாய்கள்

குலைக்கின்றன. ஒரு நாய் பல்லைக் காட்ட மற்ற நாய்களும் பல்லைக் காட்டுகின்றன. ஒரு நாய் உறும மற்ற நாய்களும் உறுமுகின்றன. பின் ஒரே சண்டைதான். மனித குலமும் அப்படித்தான். அப்படிச் சண்டையிடுவதை விட்டு எப்போதும் மனிதர்களாக வாழவேண்டுமென்பது காந்தியின் கருத்து.

மனிதன் பிறக்கும்போது புலி நகத்தோடும் எருமைக் கொம்போடும் பிறக்கிறதில்லை. அவன் மேலான தெய்வ சக்தியோடு பிறக்கிறான். அப்படியிருக்கும்போது அவன் தனது சங்கடங்களைத் தீர்க்கப் புறத்தேயுள்ள ஆயுதங்களை ஏன் தேட வேண்டும். தன்னிடத்தேயுள்ள தர்மாயுதத்தை உபயோகித்துப் போராடுவதே சாலச் சிறந்தது. இவ்வுண்மைகளை நன்குணர்ந்த காந்தி ஆத்ம சக்தியை அரசியல் உரிமைகளைப் பெறப் பயன்படுத்தினார். அவர் ஒரு சிறந்த ஆத்ம புருஷர் என்று கூறுவது பொருந்தும்.

பகைவர்களை நேசிக்க வேண்டும் என்ற கொள்கையைக் காந்தி தமது வாழ்க்கையிற் பலமுறை கையாண்டனர். தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் அவரை உதைத்து அடித்து அவமானஞ் செய்தபோதும் அவர் சிறிது கோபந்தானுமின்றி அவர்களிடம் அன்பு செலுத்தினர். அவர்களைப் பற்றிப் நகரகாவலரிடம் அறிவிக்கவும் அவர் மறுத்தனர். மேலும் அங்கே நடந்த 'போயர்' யுத்தத்திலும், 'சுலு' கலகத்திலும் ஒரு சிகிச்சைப் படை திரட்டி வெள்ளையர்களுக்குப் பணிபுரிய முன் வந்தனர். உலக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயருக்கும் உதவிபுரிய அவர் அக் காலத்தில் முன்வந்தனர். தென்னாபிரிக்க வெள்ளையர் தளபதியாகிய ஜெனரல் ஸ்மட்ஸ் (General Smuts) என்பவருடைய காரியதரிசி காந்திக்கு எழுதிய கடிதமொன்றிற் பின்வருமாறு கூறியுள்ளார் ;

"உங்களுடைய சனங்களை நாங்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்குத் தேவையான காலத்தில் நீங்கள் உதவி செய்தீர்கள். அப்படிப்பட்ட உங்கள் மேல் கை வைப்பது எப்படி?...... எங்களுக்கு என்ன செய்வதென்ற திகைப்பு ஏற்படுகிறது."

காந்தி தமது கொள்கைகளை நிலைநாட்டுவதில் எவ்வளவு உறுதி பூண்டிருந்தபோதிலும் தமது பகைவர்களுக்குச் சங்கடங்கள் நேர்ந்த காலத்தில் அவர்களிடத்தில் இரக்கங் காட்டினர் என்பது மேற்காட்டிய கடிதத்தால் நன்கு துணியப்படும். பகைவர்களோடு எவ்வளவுக்கு ஒத்துழைக்கலாமோ அவ்வளவுக்கு ஒத்துழைக்க அவர் ஆயத்தமாயிருந்தனர். எந்தச் சமயத்திலும் தமது எதிரியோடு சமாதானம் ஏற்படுத்தவும் உடன்பாடுள்ளவராய் இருந்தார்.

தென்னுபிரிக்காவிலுள்ள 'மாரிஸ் பேர்க்' என்னும் புகையிரத நிலையத்திலேயே 'சத்தியாக்கிரகம்' காந்தியின் மனத்தில் முதன் முதல் உருவாகியது. புகைவண்டியில் முதலாம் வகுப்பில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த காந்தியை ஒரு வெள்ளையன் பலாத்காரமாகத் தள்ளிக் கீழே இறக்கி அவமானஞ் செய்தான். புகைவண்டியும் அவரை அங்கு விட்டுப் போயிற்று. அவர் அந்தப் புகைவண்டி நிலையத்தில் கடுங் குளிரில் ஓர் இருட்டறையில் நித்திரையின்றித் தமக்கேற்பட்ட அவமானத்தைப் பொறுமையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தார். பல எண்ணங்கள் அவருடைய மனதில் எழுந்தன. வெள்ளையரால் ஏற்படும் தீமைகள் எல்லாம் அவருடைய மனதில் தோன்றின. ஏழை மக்களின் முதுகில் இருந்துகொண்டு ஆட்சிபுரியும் வெள்ளையர் என்னுஞ் சுமையை எவ்வாறு இறக்குவது என்று ஊன்றி நினைத்தபோது உருவாகிய முறைதான் 'சத்தியாக்கிரகம்'.

சத்தியாக்கிரகம் தென்னுபிரிக்காவிலும், இந்தியாவிலும் பலமுறை காந்தியினுல் கையாளப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் அது 1922, 1930, 1934 என்னும் ஆண்டுகளில் இந்தியாவிற் கையாளப்பட்டது. சத்தியாக்கிரகத்தில் ஆண்களும் பெண்களும் சரிவரக் கலந்து போராடினர். ஓர் மெலிந்த ஏழை பங்காளனுகிய காந்தி ஆத்மபலம் என்னும் நவீன ஆயுதத்தைக் கொண்டு முப்பது கோடி மக்களின் விடுதலையைப் பெற்றது வியத்தற்குரிய தொன்ருகும்.

## தோற்றம் குணம் முதலியன

அவர் கூரிய கண்களும், அகன்ற காதுகளும், குடுமியோடு கூடிய வழுக்கைத் தலையும், விசாலமான நெற்றியும், பொக்கு வாயும், எலும்பு மிதந்த உடலும், முழந்தாள்வரை தொங்கத் தாறுபாய்ச்சிக் கட்டிய நான்கு முழ வேட்டியும், கையிற் பொல்லும் பையும், காலிற் செருப்பும் கூடிய ஏழையாகக் காட்சியளித்தார். அவர் ஏழைமக்கள் நடுவில் ஒரு சிறிய குடிலில் தமது வாழ்க்கையை நடாத்திஞர். அவர் உப்பு, புளி, மிளகாயற்ற உணவினைச் சிறியவளவில் உண்டனர். எங்கு சென்ருலும் ஒரேவிதமான சீவியத்தை நடாத்திஞர். லண்டன் மாநகரில் நடந்த வட்டமேசை மகாநாட்டிற்குச் சென்றபோது முதலில் செல்வந்தருக்குரிய நாகரிகமான 'டோசெஸ்டர்' விடுதியில் அவருக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் அந்த டாம்பிகமான விடுதியில் தங்க விரும்பவில்லை. பின் லண்டனின் கீழ்க் கோடியில் (East End) மூரியல் லெஸ்டர் என்னும் அம்மையாரால் நடாத்தப்பட்ட ''கிங்ஸ்லி ஹாலில்'' ஏழைத் தொழிலாளரோடு தாமும் ஒருவராகத் தங்கியிருந்தார். அவர் பிரயாணஞ் செய்யும்போது மூன்ரும் வகுப்பிலேயே போவது அவரது வழக்கம். அவர் உலகில் தமக்கென வைத்திருக்கும் பொருள்கள் மூன்று. அவை மூக்குக் கண்ணுடி, கடிகாரம், ஊற்றுப் பேனை என்பன. ஒரு

சுதேச மன்னரின் மந்திரியின் மகனாகப் பிறந்து, நியாய வாதியாகப் பயிற்சி பெற்ற அவர் தமக்குள்ள அந்தஸ்து, அதிகாரம், செல்வாக்கு, படிப்பு முதலிய எல்லாவற்றை யுந் துறந்து அன்பு, ஒழுக்கம், பணிவு, கருணை, வறுமை, உறுதி, அஞ்சாமை, எளிமை, நிதானம், தியாகம் முதலிய நற்குணங்கள் எல்லாம் உருவெடுத்த வடிவமாக விளங்கினார்.

ஆங்கிலேய அரசின் கீழ் இந்திய மக்கள் செல்வத்தை யும், மனிதத் தன்மையையும், கடவுட்டன்மையையும், தம்மைப் பாதுகாக்கும் வன்மையையும் இழந்து போயிருக்கும் கேவல நிலையை நன்குணர்ந்து அவர்களை உயர்த்துவதற்கு வேண்டிய சேவைகளைச் செய்யத் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த தியாக புருடனாக விளங்கினார் காந்தி. கிழக்கிந்திய வர்த்தக சங்கத் தாரால் அழிக்கப்பட்ட நெசவுத் தொழிலை விருத்தி செய்யும் நோக்கமாகக் கதரை உற்பத்தி செய்தார். சமுதாயத்துக்குக் கேடு விளைக்கும் தீண்டாமை, மது பானம் என்பவற்றை ஒழிக்கத் தீவிரமாக முயன்று எதிர்பாராத பெருவெற்றி கண்டார்.

பக்தியும் ஞானமும் கலந்த பாரத தேச பரம்பரை யும், அரசியலுரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் போரா டும் மேல்நாட்டுப் பரம்பரையும் காந்தியிடம் ஒன்று சேர்ந்திருந்தபடியால் அவர் அவற்றை இணைக்கும் பால மானார். மேலும் அவர் தெய்வீகத்தையும் லௌகீகத்தை யும் இணைக்கும் பாலமுமானார்.

துயரென்னும் இணையிலாப் பாதையிற் செல்லும் யாத்திரிகனாகிய அவருக்கு உயர்நெறி காட்டி, அறி வொளி யூட்டி, மனோதைரியத்தைக் கூட்டி ஊக்குவித்த ஒப்புயர்வற்ற நூல் பகவத் கீதையாகும். அந் நூலின் மூன்றாம் அத்தியாயத்திலுள்ள பின்வருஞ் சுலோகம் காந்தியால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டதொன்று.

ஹதோ வா பராப்ஸ்யஸி ஸ்வர்க்கம்
ஜித்வா வா போஸ்யஸே மஹீம்
தஸ்மாத் உத்திஷ்ட, கௌந்தேய!
யுத்தாய கிருத நிஸ்சய:

(3-ம் அதி. 38 வது சுலோ.)

"அருச்சுனனே! இன்பம், துன்பம், இலாபம், நட்டம், வெற்றி, தோல்வி என்ற இவற்றைச் சமமாகக் கருதி நீ போருக்குத் தயாராக எழுந்து நில். நீ இவ்வாறு செய்தால் பாபம் அடையமாட்டாய்."

மேற்கூறிய போதனை கிருஷ்ண பகவானால் போர் முனையில் அருச்சுனனுக்குச் செய்யப்பட்டது. இதனைப் பின்பற்றியே காந்தியும் இந்திய சுதந்திரப் போரை வெற்றிகரமாக முடித்தார். இந்தியாவின் வறுமையை அகற்ற அவர் இன்னும் ஒரு போரைச் செய்ய ஆயத்தஞ் செய்து வந்தனர். அவர் அதைத் தொடங்கு முன் **1948**-ம் ஆண்டு ஒரு மருட்டியப் பிராமணனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாழ்க காந்தி! வாழ்க காந்தி தத்துவம்!

# அபிப்பிராயங்கள்

ஆத்மபலம், அநுபவஞானம் முதலியன நிறைந்த புனிதத் தன்மையை காந்தியடிகளிடம் காண்பதுபோல வேறொருவரிடத்தும் காணமுடியாது.

— சேர் எஸ். இராதாகிருஷ்ணன்.

மகான்கள் பலருள் காந்தியடிகள் ஒருவரே மானிட சமுதாயத்திற்குச் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் வழங்கி வரும் தூதராயிருக்கிறார்.

— வண. சி. எப். அன்ட்ரூஸ்.

காந்தி உலக சமயாசாரிகளில் ஒருவராகவிருக்கிறார்;

— கனம். ஜான். எச் ஹாப் மேயர்.

வரப்போகிற மானிட சமுதாயம் எப்படியிருக்க வேண்டுமென்பதைத் தமது மனதினால் நினைத்தும், செயலால் காட்டியும் வருகிற நமது குருநாதரும் தலைவருமான காந்தியடிகளுக்கு நமது வணக்கத்தைச் செலுத்துவோமாக.

— ரோமேயின் ரோலன்து.

காந்தி தர்மரீதியான நடவடிக்கைகளால் தமது நாட்டை மற்றவர்கள் மதிக்கும்படி செய்திருக்கிறார்.

— சேர் பிரான்ஸிஸ் யங்கஸ்பன்ட்.

தாம் எந்த இலட்சியத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறாரோ அந்த இலட்சியத்திற்காக எவ்வித தியாகத்தையும் செய்ய அவர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதை நான் பாராட்டுகிறேன்.

— மகாகனம் வைக்கவுண்ட் ஹாலிபாக்ஸ்.

# புலவரக வெளியீட்டு நூல்கள்

## கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை இயற்றியன

### செய்யுள் நூல்கள்

| | | ரு. ச. |
|---|---|---|
| 1. | மயிலணி அந்தாதி | -50 |
| 2. | காசியாற்றுப்படை | -35 |
| 3. | மயில்ணிமுருகவேள் மும்மணிக்கோவை | -25 |
| 4. | சந்திரசேகரப்பிள்ளையார் இரட்டைமணிமாலை | -15 |
| 5. | நினைவுப்பாமாலை | -10 |

### வசன நூல்கள்

| | | |
|---|---|---|
| 6. | புலவர் நினைவுகள் | 1-00 |
| 7. | மகாத்மா. காந்தி | -35 |
| 8. | சிவசம்புப்புலவர் சரித்திரம் | -30 |

### தொகுப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 9. | முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு | 1-50 |
| 10. | முத்துக்குமாரகவிராயர் பிரபந்தத்திரட்டு | 1-00 |
| 11. | தோத்திரமஞ்சரி | 1-25 |
| 12. | முருகன் திருப்புகழ்மாலை | 1-00 |

### பதிப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 13. | மாவைப்பதிகம் (அ. குமாரசுவாமிப்புலவர்) | -10 |
| 14. | தமிழ்ப்புலவர் சரித்திரம் .. | 5-00 |
| 15. | ஐயனார் ஊஞ்சல் (முத்துக்குமார கவிராயர்) | -10 |

## குமாரசுவாமிப்புலவர் இயற்றியன

| | | |
|---|---|---|
| 1. | வினைப்பகுபதவிளக்கம் | 1-00 |
| 2. | இலக்கணசந்திரிகை | 1-00 |
| 3. | சிசுபாலசரிதம் | 1-00 |
| 4. | இரகுவமிசசரிதாமிர்தம் | -75 |
| 5 | இதோபதேசம் | -60 |
| 6. | கலைசைச்சிலேடைவெண்பா அரும்பதவுரை | -25 |

கிடைக்குமிடம்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

புலவரகம் மயிலணி சுன்னாகம் P. O. இலங்கை